பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 09 2025 7.15
புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

1. நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் திறன்மிக்க மருத்துவர்கள் கிடைப்பதை தமது அரசு உறுதி செய்யும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. ஜம்மு கஷ்மீரில் இருந்து மாநிலங்களவைக்கு 4 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 24-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
3. சத்திஷ்கரில் 71 நக்ஸலைட்டுகள் பாதுகாப்புப் படையினர் முன் இன்று சரணடைந்தனர்.
4. பிரபல கன்னட மொழி நாவலாசிரியர் Bhyrappa இன்று பெங்களூருவில் காலமானார்.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 51 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

-- இனி விரிவான செய்திகள் ---

நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் திறன்மிக்க மருத்துவர்கள் கிடைப்பதை தமது அரசு உறுதி செய்யும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு கூடுதல் இடங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடல்சார் துறையில் சுயசார்பை எட்டுவதற்கு ஏதுவான தொகுப்பு திட்டத்திற்கும் இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பீகாரின் Sahebganj – Areraj – Bettiah வழித்தடத்தில் 3 ஆயிரத்து 822 கோடி ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்

இதேபோல் அம்மாநிலத்தின் Bakhtiyarpur – Rajgir – Tilaiya வழித்தடத்தில் இரட்டை ரயில் பாதை அமைக்கும் 2 ஆயிரத்து 192 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் பீகார் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கப்பல் கட்டுமானத் துறையில் அடுத்த 22 ஆண்டுகளுக்குள் ஐந்தாவது பெரிய நாடாக உருவெடுப்பதற்கு மத்திய அமைச்சரவையின் முடிவு உதவிடும் என்று கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தினை பதிவு செய்துள்ள அவர், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முடிவினை மேற்கொண்டதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

*இந்நிலையில் மருத்துவப் படிப்புக்கான இடங்களை அதிகரிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன்மூலம் அரசு மருத்துவக் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு கூடுதலாக 10 ஆயிரத்து 23 இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.*

*சுகாதாரத் துறையை வலுப்படுத்துவதற்கு இது உதவிடும் என்றும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.*

*>><><><<*

*ஜம்மு கஷ்மீரில் இருந்து மாநிலங்களவைக்கு 4 உறுப்பினர்களையும் பஞ்சாபில் இருந்து ஒருவரையும் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 24-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*இதற்கான வேட்பு மனுதாக்கல் அடுத்த மாதம் 6 ஆம் தேதி தொடங்கி 13 ஆம் தேதி வரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை 14 ஆம் தேதி நடைபெறும் என்றும் மனுக்களை விலக்கிக் கொள்ள 16 ஆம் தேதி கடைசி நாளாகும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*போட்டியிருக்கும் பட்சத்தில் தேர்தல் நடைபெறும் என்றும், வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஜம்மு கஷ்மீரில் நான்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான இடங்கள் கடந்த நான்காண்டுகளாக காலியாக உள்ளதை அடுத்தும் பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சி மாநிலங்களவை உறுப்பினர் திரு. சஞ்சீவ் அரோரா தமது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்தும், இந்த தேர்தல் நடைபெறுகிறது.*

*பஞ்சாப் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றிபெற்றதை அடுத்து, திரு. சஞ்சீவ் அரோரா தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்திருந்தார்.*

*>><><><<*

*சத்திஷ்கரில் 71 நக்ஸலைட்டுகள் பாதுகாப்புப் படையினர் முன் இன்று சரணடைந்தனர்.*

*தண்தேவாடாவில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. Gaurav Rai, இவர்களில் 30 நக்ஸலைட்டுகள் குறித்து தகவல் தெரிவிப்போருக்கு 64 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார்.*

*சரணடைந்தவர்களில் 21 பேர் பெண்கள் என்று திரு. Gaurav Rai குறிப்பிட்டார்.*

*>><><><<*

*திரிபுரா மாநிலத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 3 சதவீத அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் டாக்டர் Manik Saha தெரிவித்துள்ளார்.*

*திரிபுரா சட்டப்பேரவையில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட அவர், துர்கா பூஜை பரிசாக இந்த அகவிலைப்படி உயர்வு அடுத்த மாதம் 1ஆம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வரும் என்று கூறினார்.*

*இதன்மூலம் அம்மாநிலத்தில் அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படை 36 சதவீதமாக அதிகரிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>><><><<*

*பிரபல கன்னட மொழி நாவலாசிரியர் Bhyrappa இன்று பெங்களூருவில் காலமானார். அவருக்கு வயது 94.*

*பத்மஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்ற அவரது மறைவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா மற்றும் தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

*>><><><<*

*மணிப்பூரில் அஸ்ஸாம் ரைபிள் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்திய முக்கிய குற்றவாளி ஒருவரை காவல்துறையினர் இன்று கைது செய்தனர்.*

*கடந்த 19ஆம் தேதி நிகழ்ந்த தாக்குதலில் இரண்டு பாதுகாப்பு படையினர் உயிரிழந்த சம்பவத்தில் தொடர்புடையவர் இந்த குற்றவாளி என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*>><><><<*

*மஹாராஷ்ட்ராவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னாவிஸ் இன்று பார்வையிட்டார்.*

*ஷோலாப்பூர் மாவட்டத்தில் வெள்ள பாதிப்புகள் குறித்து அப்பகுதி மக்களிடம் கேட்டறிந்தார்.*

*பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு வழங்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.*

*இதனிடையே, முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு தனது ஒருமாத ஊதியத்தை வழங்கவுள்ளதாக அம்மாநில அமைச்சர் திரு. Chagan Bhujbal கூறியுள்ளார்.*

*>><><><<*

*மேற்குவங்கத்தில் மழை வெள்ளத்தால் உயிரிழந்த 10 பேரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கொல்கத்தா மின் பகிர்மானக் கழகம், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*>><><><<*

*கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் ஆரோக்கியமான மகளிர் – வலிமையான குடும்பம் இயக்கத்தின் ஒரு பகுதியாக சுகாதார முகாம் இன்று நடைபெற்றது.*

*இதில், பெண்களுக்கான பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த முகாமில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டதாக மருத்துவ அலுவலர் டாக்டர் Niju எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*>><><><<*

*தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பதற்குப் பதிலாக, பாகிஸ்தான் தனது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மனித உரிமைகளை பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நாவுக்கான இந்திய தூதர் திரு. K. Tyagi தெரிவித்துள்ளார்.*

*ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்தியாவுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை பாகிஸ்தான் பிரதிநிதிகள் எழுப்புவதாக குறை கூறினார்.*

*>><><><<*

ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதன் மூலம் இந்தியாவும் சீனாவும், யுக்ரைன் போருக்கு உதவி வருகிறது என்ற அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் ட்ரம்ப்பின் குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது.

பெய்ஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு Guo Jiakun, அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும், ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொண்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

சீன நிறுவனங்களை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் திரு Guo Jiakun கூறினார்.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 51 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

பிரிஸ்பெனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா 49 புள்ளி நான்கு ஓவரில் 300 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

Vaibhav Suryavanshi மற்றும் Vihaan Malhotra தலா 70 ரன் எடுத்தனர்.

301 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா 47 புள்ளி இரண்டு ஓவரில் 249 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை முதல் இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்று இந்தியா கைப்பற்றியது.

-----------------

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

------------------

Jingshan ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Riya Bhatiya – நெதர்லாந்தின் Lian Tran இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-3, 10-4 என்ற செட்கணக்கில் சீனாவின் Yexin Ma – Zhang Yang இணையை வென்றது.

-----------------

Kaohsiung மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Saneeth Dayanand காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-18, 21-18 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Korakrit Laotrakul -ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Isharani Baruah காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

>> <<